# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.5.1.A

எண்ணியல் - தசம எண்கள் - மீள்பார்வை

## எண்ணியல் - தசம எண்கள் - மீள்பார்வை

முந்தைய வகுப்பில் கற்ற தசம எண்களை மீண்டும் ஒரு முறை மீள்பார்வை செய்வோம்.

1) $3\frac{6}{4}$ என்ற பின்னத்தை தசம எண்ணாக மாற்றுக.

பின்னத்தை தசம எண்ணாக மாற்ற, பகுதியை பத்தின் மடங்காக மாற்ற வேண்டும்.

$$3\frac{6}{4} = \frac{(3 \times 4) + 6}{4} = \frac{18}{4}$$

$$= \frac{18 \times 25}{4 \times 25} = \frac{450}{100} = 4.5$$

| | | | |
|---|---|---|---|
| | | 1 | 8 |
| × | | 2 | 5 |
| | | 9 | 0 |
| | 3 | 6 | |
| | 4 | 5 | 0 |

$3\frac{6}{4}$ - ன் தசம எண் **4.5** ஆகும்.

2) 20.5 என்ற தசம எண்ணை எளிய பின்னமாக மாற்றுக.

ஒரு தசம இலக்கம் கொண்ட தசம எண்ணை எளிய பின்னமாக மாற்ற 10 -ஆல் பெருக்க வேண்டும்.

$$20.5 = \frac{20.5 \times 10}{10} = \frac{205}{10}$$

$$= \frac{\cancel{205}^{41}}{\cancel{10}_{2}} = \frac{41}{2} \qquad (\because 5 \text{ ஆல் வகுக்க.})$$

20.5 - ன் எளிய பின்னம் $\frac{41}{2}$ ஆகும்.

3) 4.1<u>2</u>4 - ல் அடிக்கோடிடப்பட்ட எண்ணின் இடமதிப்பு என்ன?

| ஒன்றுகள் | | பத்தில் ஒன்றுகள் | நூறில் ஒன்றுகள் | ஆயிரத்தில் ஒன்றுகள் |
|---|---|---|---|---|
| 4 | . | 1 | **2** | 4 |

2 - ன் இடமதிப்பு **நூறில் ஒன்றுகள்** ஆகும்.

4) 6.33, 6.98, 5.04, 7.21 ஏறுவரிசையில் எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | . | 3 | 3 | ② | ② |
| 6 | . | 9 | 8 | ② | ③ |
| 5 | . | 0 | 4 | ① | |
| 7 | . | 2 | 1 | ④ | |

- முதலில், கொடுக்கப்பட்ட அனைத்து எண்களின் முழு எண் பகுதியை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, $5 < 6 < 7$. 6.33 மற்றும் 6.98 ஆகியவை சமமான முழு எண்பகுதியைப் பெற்றுள்ளன.
- எனவே, அவற்றின் அடுத்த இலக்கம் அதாவது பத்தில் ஒன்றாம் இலக்கத்தில் உள்ள எண்களை ஒப்பிட வேண்டும்.
- இங்கு, $3 < 9$.

ஏறுவரிசை : **5.04, 6.33, 6.98, 7.21.**

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/rQHJ_I0-5Fo

## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 7th October, 2022 :: 04:31 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.